இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 22-03-2025

# அறிவியல் வெல்லும்

அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசாவும், போயிங் நிறுவனமும் இணைந்து தயாரித்த 'ஸ்டார்லைனர்' என்ற புதிய விண்கலத்தின் மூலம் அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸும் அமெரிக்கக் கடற்படை விமானி புட்ச் வில்மோரும் விண்வெளியில் 286 நாட்கள் இருந்துவிட்டுத் திரும்பி இருக்கிறார்கள். உலகம் இதுவரை பார்க்காத சாதனையாக இது போற்றப்படுகிறது.

இவரது பூர்விகப் பிறப்பிடம் இந்தியா என்பதும் பெருமைக்குரியது ஆகும். கல்பனா சாவ்லாவைத் தொடர்ந்து நாசாவில் பணிபுரியும் இரண்டாவது இந்திய வம்சாவளி அமெரிக்க விண்வெளி வீராங்கனையாக சுனிதா இருக்கிறார்.

சர்வதேச விண்வெளி நிலையமானது பூமியில் இருந்து 408 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. கடந்த ஆண்டு (2024) ஜூன் மாதம் 5 ஆம் தேதியன்று இவர்கள் 8 நாள் பயணமாகத்தான் இவர்கள் அனுப்பிவைக்கப்பட்டார்கள். ஸ்டார் லைனரில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அந்த விண்கலம் மட்டும் செப்டம்பர் 7 ஆம் தேதி (2024) திரும்பி விட்டது. சுனிதாவும் வில்மோரும் பல மாதங்கள் விண்வெளியில் தங்க வேண்டியதாயிற்று. டிராகன் விண்கலம் கடந்த 16 ஆம் தேதி 4 வீரர்களுடன் விண்வெளிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. 17 மணி நேரப் பயணத்தில் அவர்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு இவர்கள் அனைவரும் பாதுகாப்பாகத் திரும்பி விட்டார்கள். விண்கலத்தைக் கடலில் இறக்கி, தரைக்குக் கொண்டு வந்துவிட்டார்கள்.

புவியின் வளிமண்டலத்தில் நுழைகிற மறுநுழைவு தான் மிகவும் ஆபத்தானது. விண்வெளியில் இருந்து பூமிக்குள் விண்கலம் நுழையும் போது ஏற்படும் உராய்வின் காரணமாக 1600 டிகிரி வெப்பம் ஏற்படும். இதனால் தீப்பிழம்பு போல விண்கலம் காட்சி அளிக்கும். அப்போது வெப்பமானது விண்கலத்துக்குள் பரவும் ஆபத்தும் உண்டு. கடந்த 2003 ஆம் ஆண்டு கல்பனா சாவ்லா விண்வெளியில் இருந்து திரும்பிய போது அவரது விண்கலம் தரை இறங்கியதும் வெடித்துச் சிதறியது. அதில் அவர் பலியானார். அப்படி மாபெரும் ஆபத்தும் உண்டு. இப்போது அனைவரையும் அமைதியாக தரையிறக்கி அழைத்து வந்து விட்டார்கள் அறிவியலாளர்கள்.

சுனிதாவும், வில்மோரும் சென்றது சாதனை. அவர்கள் திரும்பி வந்ததுதான் அதைவிடப் பெரிய சாதனை. இன்னொரு குழுவினர் போய் அழைத்துவந்தது மாபெரும் சாதனையாகும்.

**ஐக்கிய அமெரிக்க கடற்படையில் இளநிலை அதிகாரியாகச் சேர்ந்து, கடற்படை விமானியாக உயர்ந்து, 1993 ஆம் ஆண்டு வளைகுடாப் போரில் பங்கெடுத்தவர் சுனிதா. 1998 ஆம் ஆண்டு நாசாவால் விண்வெளி வீரராகத் தேர்வு செய்யப்பட்டார். 2006ஆம் ஆண்டு முதன்முதலாக விண்வெளிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். 195 நாட்கள் தங்கி இருந்தார். 2012 ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக அனுப்பி வைக்கப்பட்டார். நான்கு மாதங்கள் இருந்தார். மூன்றாவது முறையாக இப்போது சென்று ஒன்பது மாதங்கள் தங்கிவிட்டுத் திரும்பி இருக்கிறார்.**

விண்வெளியில் நீண்ட காலம் தங்கிய முதல் பெண்ணாக சுனிதா உயர்கிறார். சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு வெளியே அதிக நேரம் இருந்த பெண் என்ற பெருமையையும் அவர் அடைகிறார். இது சுனிதாவின் மூன்றாவது விண்வெளிப் பயணம் ஆகும்.

**இந்த மூன்று பயணங்களிலும் மொத்தமாகச் சேர்த்து 9 முறை அவர் விண்வெளியில் நடந்துள்ளார். மொத்தம் 62 மணி நேரம் 6 நிமிடங்கள் விண்வெளியில் அவர் நடந்துள்ளார். இதன் மூலம் அதிக நேரம் விண்வெளியில் நடந்த பெண் என்ற சாதனையையும் அவர் செய்துவிட்டார்.**

**சர்வதேச விண்வெளி நிலையமானது ஒரு நாளில் 16 முறை பூமியைச் சுற்றி வருகிறது. விண்வெளியில் சுனிதா தங்கி இருந்த 286 நாட்களில் 4,576 முறை பூமியைச் சுற்றி வந்துள்ளார். ஒவ்வொரு ஒன்றரை மணி நேரத்துக்கும் ஒரு முறை சூரிய உதயத்தையும், சூரிய நிறைவையும் பார்த்துள்ளார்கள்.**

'பெண்ணால் அனைத்தும் முடியும்' என்பதை சுனிதா மெய்ப்பித்து விட்டார். ஆணாதிக்கச் சமூகத்தால் பெண்ணின் வளர்ச்சியானது வார்த்தைகளால், சிந்தனையால், செயல்பாட்டால், அடக்குமுறையால் கட்டுப்படுத்தப் படுகிறது. 'இதற்குள் வரலாம், இதற்கு வரக்கூடாது, இந்த எல்லைக்குள் போகலாம், இந்த எல்லைக்குள் போகக்கூடாது, இந்த வேலையை மட்டும் செய்யலாம், இந்த வேலையைச் செய்யக் கூடாது, இந்த நாளில் செய்யலாம், இந்த நாளில் செய்யக் கூடாது' என்ற கட்டுப்பாடுகளை ஆணாதிக்கச் சமூகம் வைத்திருக்கிறது. பெண்ணின் உடல் இயல்புகளை, தீட்டுகளாக ஒதுக்கி வைக்கிறது. அதாவது, புறக்கணிப்புக்கு ஒரு புனிதம் சேர்க்கும் செயல்கள் இவை. இந்தக் கட்டுப்பாடுகள் அனைத்தையும் புறந்தள்ளி விட்டார் சுனிதா.

ஈர்ப்பு விசையே இல்லாத விண்வெளியில் மிக நீண்ட காலம் தங்கும் அளவுக்கு உடலைப் பக்குவப்படுத்தி வைத்திருந்தார் சுனிதா.

**விண்வெளியை வெல்லலாம், ஆனால் சமூகத்தின் புண்வெளியை வெல்லுதல் பலருக்கும் சிரமம். அதைத் தாண்டியதுதான் சுனிதாவின் மாபெரும் சாதனையாகும். ஏராளமான சுனிதாக்கள் உருவாகலாம். எல்லோரும் விண்வெளிக்குச் சென்றால் மட்டும்தான் சாதனை அல்ல. சமூகவெளியை வெல்வதும் சாதனைதான். சமூகத் தடைகளை உடைத்து வெல்வதும் சாதனைதான்.**

மூடநம்பிக்கைகளின் முடைநாற்றத்தை அறிவியல் வெல்லும். அறிவியலால் அடைந்த வெற்றியே நிலையானது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.3.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் திருச்சிராப்பள்ளி மாநகரில் 290 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலகத்தரத்துடன் கட்டப்படவுள்ள மாபெரும் கலைஞர் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், பொதுப்பணித் துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் / பொது நூலக இயக்குநர் முனைவர் பொ. சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.3.2025) தலைமைச் செயலகத்தில், அயர்லாந்து நாட்டின் உயர் கல்வி, ஆராய்ச்சி, புதுமை மற்றும் அறிவியல் துறை அமைச்சர் ஜேம்ஸ் பெட்ரிக் லாலஸ் (Mr. James Patrick Lawless) மற்றும் இந்தியாவிற்கான அயர்லாந்து நாட்டு தூதர் கெவின் கெல்லி (Mr. Kevin Kelly) ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத்துறைச் செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், அயர்லாந்து நாட்டின் உயர் அலுவலர்கள் பெர்கல் என்டா பிலானே (Fergal Enda Blaney), நல்டி மார்க், சென்னையிலுள்ள அயர்லாந்து நாட்டு துணைத் தூதர் ராஜீவ் மெச்சேரி, ஒன்றிய வெளியுறவு அமைச்சகத்தின் உயர் அலுவலர் எஸ். விஜயகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### திருச்சிராப்பள்ளியில் ரூ.290 கோடி மதிப்பீட்டில் உலகத் தரத்துடன் கட்டப்படவுள்ள

# மாபெரும் "கலைஞர் நூலகம் - அறிவுசார் மையம்!"

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, மார்ச் 22-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.3.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் திருச்சிராப்பள்ளி மாநகரில் 290 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலகத் தரத்துடன் கட்டப்படவுள்ள மாபெரும் கலைஞர் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.**

**நெற்களஞ்சியப் பகுதியில் ஓர் அறிவுக் களஞ்சியம்**

காவிரிக் கரையில் அமைந்த திருச்சிராப்பள்ளி மாநகரில், உலகத்தரம் வாய்ந்த மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கலைஞர் பெயரால் அமைக்கப்படும் என்றும், இது பல்வேறு வசதிகளை உள்ளடக்கி, தமிழ்நாட்டின் நெற்களஞ்சியப் பகுதியில் ஓர் அறிவுக் களஞ்சியமாக அமைந்திடும் என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 27.6.2024 அன்று சட்டமன்றப் பேரவையில் விதி எண் 110ன் கீழ் அறிவித்தார்.

அந்த அறிவிப்பினை செயல்படுத்திடும் வகையில், திருச்சிராப்பள்ளி மாநகரில் 1,97,337 சதுர அடி பரப்பளவில், தரை மற்றும் ஏழு தளங்களுடன் நூலகக் கட்டடம் 235 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், புத்தகங்கள் மற்றும்

இபுத்தகங்கள் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், தொழில்நுட்ப சாதனங்கள் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், என மொத்தம் 290 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலகத்தரத்துடன் அமைக்கப்படவுள்ள மாபெரும் கலைஞர் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

**1000 இருக்கைகள் கொண்ட கலையரங்கம்!**

இந்நூலகத்தின் தரைத் தளத்தில் - வரவேற்பறை, தகவல் வழங்கும் மற்றும் பதிவு செய்யும் பகுதி, பொருட்கள் வைக்கும் பகுதி, முக்கிய பிரமுகர் அறை, சொந்த புத்தகங்கள் படிக்கும் பகுதி, பருவ இதழ்கள்/பத்திரிகைகள் அறை, நூலகர் மற்றும் தகவல் அலுவலர் அறை, காத்திருப்போர் பகுதி, மாற்றுத்திறனாளிகளுக்கான பகுதி மற்றும் 1000 இருக்கைகள் கொண்ட கலையரங்கம்;

முதல் தளத்தில் அறிவியல் மையம், சொந்த புத்தகங்கள் படிக்கும் பகுதி, நிகழ்ச்சிகள் நடத்தும் அரங்கம், குழந்தை களுக்கான திரையரங்கம், குழந்தைகளுக்கான நூலகம் மற்றும் படப்புத்தகங்கள் பகுதி;

இரண்டாம் தளத்தில் கலைஞர் பகுதி, ஆராய்ச்சி மையம், பயிலரங்கம் மற்றும் பல்நோக்குக் கூடம்;

மூன்றாம் தளத்தில் - தமிழ் நூலக குறிப்பு பகுதி, தமிழ் நூலகம் படைப்பாளர் பகுதி, தமிழ் நூல்கள் உறுப்பினர்களுக்கு வழங்கும் பகுதி;

நான்காம் தளத்தில் ரோபாட்டிக்ஸ் மற்றும் விளையாட்டுப் பகுதி, இணைய (டிஜிட்டல்) நூலகம் மற்றும் ஆங்கில நூல்கள் உறுப்பினர்களுக்கு வழங்கும் பகுதி;

ஐந்தாம் தளத்தில் அறிவுசார் மையம், செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி மையம் மற்றும் ஆங்கில நூலக குறிப்பு பகுதி;

**போட்டித் தேர்வுப் பகுதி**

ஆறாம் தளத்தில் - நூல்கள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு அறை, பார்வைக் குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளுக்கான பகுதி, அரிய நூல்களுக்கான பகுதி, டிஜிட்டல் மயமாக்கல் பகுதி, டிஜிட்டல் ஸ்டுடியோ, போட்டித் தேர்வு பகுதி மற்றும் கருத்தரங்கு கூடம்;

ஏழாம் தளத்தில் காணொலி (வீடியோ கான்பரன்சிங்) காட்சியரங்கம். தலைமை நூலக அலுவலர் அறை, துணை தலைமை நூலக அலுவலர் அறை, நூலகர் மற்றும் தகவல் அலுவலர் அறை, நிர்வாகப் பகுதி ஆகிய வசதிகளுடன் கட்டப்படவுள்ளது.

மேலும், நகரும் படிகட்டுகள், 2 கண்ணாடி மின் தூக்கிகள், 7 மின் தூக்கிகள், தீயணைப்பு வசதிகள், அனைத்து தளங்களிலும் குளிர்சாதன வசதி, மின் ஆக்கிகள், மின் மாற்றிகள், சூரிய மின்களங்கள் போன்ற பல வசதிகளுடன் கட்டப்படவுள்ளது.

**திராவிடத் தலைவர்களின் அரிய நூல்கள்!**

இந்நூலகத்தில், உலகத் தமிழ் இலக்கியம், பழந்தமிழ் இலக்கியம், நவீன இலக்கியம், இலக்கணம், கலை, கவிதை, நாடக நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் திராவிட தலைவர்களின் நூல்கள், பெண்ணியம், தேசிய இயக்கத் தலைவர் நூல்கள், அரிய நூல்கள், மருத்துவம், பொறியியல், இசை, விளையாட்டு, சட்டம் போன்ற பல்துறை சார்ந்த நூல்கள், போட்டித் தேர்வு மாணவர்களுக்கான நூல்கள் ஆகியவை இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்ட மன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், பொதுப் பணித் துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் / பொது நூலக இயக்குநர் முனைவர் பொ.சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருச்சிராப்பள்ளியிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.பிரதீப் குமார், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் சட்டமன்றத் தொகுதி நெமிலி கிழக்கு ஒன்றிய தி.மு.க. மற்றும் நெமிலி பேரூர் தி.மு.க. சார்பில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, நெமிலி கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஒன்றிய குழு தலைவர் பெ.வடிவேலு தலைமையிலும் பேரூர் செயலாளர் ஜி.ஜனர்த்தனன் வரவேற்புரையிலும் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக கழக அமைப்புச் செயலாளர் ஆலந்தூர் ஆர்.எஸ். பாரதி கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.காந்தி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிநலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள்.